DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No: CC.No.208/2016**

**prosecution witness: DW–1**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

**Complainant and Accused present.**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | நாகசுந்தரம் | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

**<u>28.01.2025</u>**

**<u>சாட்சி மனுவின் பெயரில் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார் :–</u>**

நான் சமூக ஆர்வலர், சமூக சேவகர் என்பதற்கு ஏதேனும் விருது வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. இராமநாதபுரம் மாவட்ட சமூக ஆர்வலர் பட்டியலில் எனது பெயர் இல்லை என்றால் சரிதான். நான் சமூக ஆர்வலர் என்பதற்கு எந்த சான்றிதழும் வழங்கவில்லை என்றால் சரி தான். நான் பொதுநலன் கருதி அறக்கட்டளை எதுவும் நடத்தி வருகிறேனா என்றால் இல்லை. நான் என்ன தொழில செய்து வருகிறேன் என்றால் KR இறால் கம்பெனியில் சூப்பர்வைசராக வேலை செய்து வருகிறேன். 2017 ல் என்ன தொழில் செய்தேன் என்றால் சூப்பர்வைசராக வேலை செய்து வந்தேன், வட்டசட்டபணிகளில் மூன்று ஆண்டுகள் பணிபுரிந்தேன். வட்டசட்டப்பணிக்குழுவில் எந்த ஆண்டு முதல் எநத் ஆண்டு வரை பணியாற்றினேன் என்றால் ஞாபகம் இல்லை. 2017 க்கு முன்பு தான் வட்டசட்டப்பணிக்குழுவில் பணியாற்றினேன் என்றால் இல்லை 2017 க்கு பின்பு தான் பணியாற்றினேன். 2017 ஆண்டுக்கு பின்பு வட்டசட்டபணிக்குழுவில் எந்தவொரு தன்னார்வலரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல என்னிடம் சான்றிதழ் உள்ளது. அந்த சான்றிதழை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எந்த வட்டசட்டப்பணிக்குழுவில் பணியாற்றினேன் என்றால் இராமேஸ்வரம் வட்ட சட்டப்பணிக்குழுவில் பணியாற்றினேன். நான் குடியிருப்பது இராமேஸ்வரம் மறவர் தெரு என்றால் சரிதான். மனுதாரர் பணிபுரிந்து வரும் பள்ளி இராமேஸ்வரம் ரோடு பள்ளி என்றால் சரிதான். எனது வீட்டிலிருந்து மனுதாரர் பணிபுரியும் பள்ளிக்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 5 கி.மீ தூரம் இருக்கும். எனது வீட்டிலிருந்து இராமேஸ்வரம் ரோடு பள்ளிவரை அரசினர் மேல்நிலைப்பள்ளி, சரஸ்வதி பள்ளி, மண்டபம் ஊராட்சி

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.01.28 15:02:20 +0530

ஒன்றிய பள்ளி எண்.1 மற்றும் பள்ளி எண்.2, டால்பின் பள்ளி, புனித ஜோசப் மேல்நிலைப்பள்ளி, ஸ்ரீராம் வித்தியாலாயா, விவேகானந்த பள்ளி, மண்டபம் ஊராட்சி ஒன்றிய பள்ளி எம் ஆர்டி நகர் ஆகிய பள்ளிகள் உள்ளது என்றால் சரிதான். அத்தனை பள்ளிகளிலும பணியாற்றும் ஆசிரியர்களை எனக்கு நன்கு தெரியும் என்றால் தெரியாது. ஏதாவது பள்ளியில் ஆசிரியர் பற்றாக்குறையிலோயோ, பள்ளிக்கட்டிடங்கள் கோரிய போராட்டங்கள் நடத்தி சிறை சென்றுள்ளேனா என்றால் இல்லை. இராமேஸ்வரம் ரோடு பள்ளி எந்த ஆண்டு கட்டடப்பட்டது என்றால் தெரியாது. இராமேஸ்வரம் ரோடு பள்ளி எந்த ஆண்டு உயர்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது என்றால் தெரியாது. இராமஸ்வரம் ரோடு பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தில் நிர்வாகியாக இருந்தேனா என்றால் நான் இல்லை எனது நண்பர்கள் உள்ளார்கள். எனது நண்பர்கள் யாரும் அந்த பள்ளியில் ஆசிரியராக பணிபுரிகிறார்களா என்றால் இல்லை. பெற்றோர் ஆசிரியர் கழகத்தில் உள்ள நண்பர்கள் யார் என்றால் பஞ்சவர்ணம், உமயராஜ் ஆகியோர்கள் ஆவார்கள். மனுதாரர் மீது உயர்அதிகாரிகளுக்கு அனுப்பிய மனுவில் உள்ள குற்ற எண்ணை எனக்கு தெரிவித்தது யார் என்றால் நண்பர்கள் தான் அவர்கள் இராமேஸ்வரம் ரோடு பகுதியை சேர்ந்தவர்கள். தகவல் கொடுத்தவர்கள் பெயரில் மனு அனுப்ப ஆலோசனை வழங்கினேனா என்றால் இல்லை எனது பெயரில் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் மனு அனுப்பினேன். நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.1 ஆவணம் எனக்கு எப்போது கிடைத்தது என்றால் எனக்கு பெயர் தெரியாத நபர் புகார்சொல்லும்போது எ.ம.சா.ஆ.1 ஆவணத்தை கொடுத்தார். அது சம்பந்தமாக மனுதாரரும், அவரது குடும்பத்தாரும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்ற விபரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் தெரியாது. எ.ம.சா.ஆ.2 ஆவணம் பற்றி எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 17.07.2014 ம் தேதி தெரியவந்தது. தகவல் அறியும் உரிமைச்சட்டப்படி எந்த தேதி மனு அனுப்பினேன் என்றால் 10.10.2015 ம் தேதி அனுப்பினேன். உதவி தொடக்க கல்வி அலுவலர் அனுப்பிய தகவல் அறியும் உரிமைச்சட்ட மனுவில் மனுதாரர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். 17.07.2014 ம் தேதி மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜரில்லை 317 மனு தாக்கல் செய்தவிபரம் எப்போது தெரியும் என்றால் இதுவரை எனக்கு தெரியாது. மனுதாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கு பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த பதில்அறிவிப்புக்கு யார்விபரம் சொன்னது என்றால் நான் தான் விபரம் சொன்னேன். அந்த பதில் அறிவிப்பில் தங்கள் கட்சிக்காரர் 17.07.2014 ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை என்ற விபரம் எனக்கு தெரியாது என்றும், அன்றைய தேதியில் மனுதாரர் வழக்கறிஞர் குவிமுச பிரிவு 317 ன் படி மனுதாக்கல் செய்தவிபரம் எனக்கு தெரியாது என்று குறிபிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பில் இவ்வாறு தெரியாமல் நடந்துவிட்டதாக வருத்தமோ, மன்னிப்பு கேட்டோ அனுப்பவில்லை என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பு எ.ம.சா.ஆ.6 ஆகும். எ.ம.சா.ஆ.7 நான் அனுப்பிய மனுவில் 5 வது பாயிண்ம் மனுதாரர் மீது ஏதேனும் துறைவாரியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்று கேட்கப்பட்டுளளது என்றால் சரிதான். நான் குற்ற எண்.8/2013 வழக்கு சம்பந்தமாக கேட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த குற்ற எண்.8/2013 ல் புகார்தாரரோ, புகார்தாரரின் உறவினரோ நான் இல்லை என்றால் சரிதான். மனுதாரர் 17.07.2014 ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜரில்லை அவர் சார்பாக மனு தாக்கல் செய்யப்பட்டு Crmp.No.914/2014 என்று கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது என்றால் 914 என்பது தவறு Crmp.No.911/2014 என்பது சரியாகும். நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.10 முதல் 13 ஆகிய ஆவணங்கள் நீதிமன்ற

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2025.01.28 15:02:26 +0530

ஆவணங்கள் என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.13 ஆவணத்தில் 17.07.2014ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்ட வழக்கு பட்டியல் என்றால் சரிதான். அன்றைய தினம் CC.No.165/2014 எண்ணிடப்படவில்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். எண்ணிடப்படாத வழக்கிற்கு எவ்வாறு நான் E court மூலம் தகவல் சேகரித்தேன் என்றால் அதில் வந்தது. மனுதாரருக்கு பிடிக்காத சக ஆசிரியர் உமயராஜ் எனது நண்பர் என்றாலும், அவரின் தூண்டுதலின் பெயரில் மனுதாரர் மீது பொய்யான புகார் அனுப்பினேன் என்றாலும், என்னை உமயராஜ் பகடைக்காயாகி பயன்படுத்தினார் என்றால் சரியல்ல. நான் அனுப்பிய புகாரால் ஆசிரியர்களிடம் மனுதாரருக்கு அவமானமும், தலைகுனிவும் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் செய்த சட்டவிரோத செயலுக்கு தண்டனை அனுபவிக்கவேண்டிய கடமை உள்ளது என்றால் சரியல்ல. இந்த மனுதாரரின் மனு நிலைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.01.28 15:02:32 +0530

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No: CC.No.208/2016**

**prosecution witness: DW-2**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

**Complainant and Accused present.**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | பஞ்சவர்ணம் | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

**<u>28.01.2025</u>**

**<u>சாட்சி மனுவின் பெயரில் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார் :-</u>**

நான் இராமேஸ்வரம் ரோடு பள்ளியில் PVC தலைவராக 5 ஆண்டுகள் பணிபுரிந்தேன். பெற்றோர் ஆசிரியர் கழகத்தில் செயலாளர் தலைமையாசிரியர் என்றால் சரிதான். பெற்றோர் ஆசிரியர் சங்க கூட்டத்தை கூட்ட வேண்டும என்றால் தலைமையாசிரியருக்கு தான் உரிமையுள்ளது என்றால் சரிதான். அங்கு ஆசிரியர் உமயராஜ் என்பவர் பணிபுரிந்தார் என்றால் சரிதான். உமயராஜின் தகப்பனார் பெயர் செல்லதுரை என்றால் சரிதான். செல்லத்துரை அந்த பகுதி சமுதாய தலைவர் என்றால் சரிதான். பெற்றோர் ஆசிரியர் சங்க கூட்டத்தில் அதன் உறுப்பினர்களோ, நிர்வாகிகளை தவிர வெளியாட்கள் கலந்துகொள்ள முடியாது என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.3 ஆவணத்தில் தலைமையாசிரியர் கையொப்பமோ, பள்ளிக்கூட சீலோ இல்லை என்றால் சரிதான். பெற்றோர் ஆசிரியர் சங்க கூட்டதீர்மானப்பக்கத்தில் தனுஷ்கோடி புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் சங்க முத்திரை என்று பதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சீலுக்கு மேல் செல்லத்துரையின் கையொப்பம் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த செல்லத்துரை தான் உமயராஜின் அப்பா என்றால் சரிதான். இந்த கூட்டமே பள்ளிக்கூடத்தில் நடைபெறவில்லை என்றாலும், பள்ளியில் தீர்மானம் நிறைவேற்றவில்லை என்றாலும் சரியல்ல. நான், உமயராஜ் ஆகியோர்கள் ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். மனுதாரருக்கும், உமயராஜ்க்கும் பணி சம்பந்தமாக உள்ள பிரச்சனை காரணமாக மனுதாரரை பணிமாறுதல் செய்ய வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தில் கையொப்பம் போட உரிமையில்லாத நபரின் தலைமையில் கூட்டம் நடைபெற்று எ.ம.சா.ஆ.3 ஆவணம் பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பொய்யான ஆவணத்தை

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2025.01.28 15:02:39 +0530

உற்பத்தி செய்து அதை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தற்காக என் மீது நடவடிக்கை வேண்டும் என்றால்சரியல்ல. எ.ம.சா.ஆ.3 ஆவணம் மனுதாரரை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. எ.ம.சா.ஆ.3 ஆவணத்தின் மூலம் மனுதாரரை அவமானம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சட்டப்படி மனுதாரரின் மனு நிலைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.01.28 15:02:44 +0530